# நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கின்றீர்களா?

*<u>வேதாகமம் முடிவு செய்வதை அனுமதிப்பதற்கு நீங்கள் மனதாயிருக்கின்றீர்களா?</u>*

I. *பின் வருவனவற்றை நீங்கள் செய்திருக்கின்றீர்களா?*

*1. ____________________ யோவான் 6:45*

*2. ____________________ யோவான் 8:24*

*3. ____________________ அப். 17:30*

*4. ____________________ ரோமர் 10:10*

*5. ____________________ மத். 28:18, 19; அப். 8:35-39*

*ஞானஸ்நானத்தின் இக்கருத்தில் ________________ அப். 2:36-38*

*________________ அப். 22:16*

*________________ மாற். 16:16*

*________________ 1 பேது. 3:21*

*________________ அப். 2:47*

II. *நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றீர்களா?*

*கிறிஸ்துவுக்குள்* | *கிறிஸ்துவுக்கு புறம்பே எபே. 2:12, 13*




*2 கொரி. 5:17 .... ________________ ________________*

*கொலோ. 1:14 .... ________________ ________________*

*2 தீமோ. 2:10 .... ________________ ________________*

*1 யோவா. 5:11 .... ________________ ________________*

*எபே. 1:3 ..... ________________ ________________*

*________________*

*கலா. 3:27*

*ரோமர் 6:3, 4*

III. *நீங்கள் சரீரத்தில் இருக்கின்றீர்களா?*

*1. கிறிஸ்துவுக்குள் எத்தனை சரீரங்கள் உள்ளன? ____________ ரோமர் 12:5*

*2. ஒரே சரீரம் என்பது என்ன? ________________ கொலோ. 1:18, 24*

*3. ஒரே சரீரத்தில் நாம் எவ்விதம் பிரவேசிக்கின்றோம்? ________________ 1 கொரி. 12:13*

*4. அதன் பிறகு நாம் என்னவாக உள்ளோம்? ________________ 1 கொரி. 12:27*

*அல்லது வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால் கிறிஸ்துவின் ________________ இருக்கின்றோம்.*

Copyright 1992 - Gospel Light Pub. Co. Delight, AR 71940

**ஒரே ஞானஸ்நானம் (எபே. 4:5)**

1. *யார்? கேள்விப்பட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டவர்கள்*
2. *ஏன்? பாவமன்னிப்புக்கென்று (அப். 2:38)*
3. *என்ன? தண்ணீர் (மத். 3:16; அப். 8:38, 39)*
4. *எப்படி? அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்ப்பிக்கப்படுதல் (ரோமர் 6:4; கொலோ. 2:12)*



*பாடத் தாளை எடுத்துரைத்தல்:*

# “நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கின்றீர்களா?”

*“நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கின்றீர்களா?” என்ற பாடத் தாள் “இரட்சிப்பின்” தாள் என்று அழைக்கப்படுகின்றது. இது இந்த ஆசிரியர் வழிகாட்டி நூலில் ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டுள்ள மூன்று பாடத் தாள்களில் எதையாவது ஒன்றைத் தொடர்ந்து வரலாம்; இருப்பினும், இது “இயேசு மனிதருக்குப் புது வழியாய் இருக்கின்றாரா?” என்பதைத் தொடர்ந்து வருதலே மிகவும் ஏற்புடையதாயுள்ளது.*

### நோக்கம்

இயேசு தம் இரத்தத்தைக் கொண்டு நம்மைக் கழுவி அவருடைய சரீரத்தின் பாகமாக, இரட்சிக்கப்பட்ட அவருடைய மக்களின், சபையின் பாகமாக நம்மை ஏற்றுக் கொள்ளுமுன்பு நாம் என்ன செய்யும்படி கேட்கின்றார் என்பதை போதிப்பதே “இரட்சிப்பு” தாளின் நோக்கமாக உள்ளது.

### பாடச் சுருக்கம்

பாடச் சுருக்கம் பின்வருமாறு: இரட்சிக்கப்பட, அதாவது, தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட விரும்புகின்றவர்கள் தேவ வசனத்தில் போதிக்கப்பட வேண்டும். அவர்கள் இயேசுவில் விசுவாசம் கொள்ள வந்தால், இயேசுவுக்காக வாழத் தீர்மானித்தால், அவரில் உள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டால், மற்றும் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றால் அவர்கள் ஆவிக்குரிய எல்லா ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ள வழியுள்ள இயேசுவினுள் பிரவேசிப்பார்கள். கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுள்ள யாவரும் கிறிஸ்துவின் சபை என்ற ஒரே சரீரமாய் இருக்கின்றார்கள்.

---

### அறிமுகம்

*[இப்பாடத்தின் அறிமுகம் முதல் மூன்று பாடங்களைச் சுருக்கமாய்த் தொகுத்துரைப்பதை உள்ளடக்கலாம். அவ்வாறு செய்வதில், ஆதாம் ஏவாள் மூலமாகப் பாவமும் மரணமும் உலகினுள் வந்தது என்பதை ஆசிரியர்*

குறிப்பிடலாம். தேவன் (மனிதரையோ மற்ற எதையுமோ) படைக்கும் முன்பே, தமது படைப்பினுள் பாவம் நுழையும் என்பதை அறிந்திருந்தார், மற்றும் அவர் சிலுவையில் இயேசுவின் மரணத்தின் மூலம் மனுக் குலத்தை இரட்சிக்க ஏற்கனவே திட்டமிட்டிருந்தார். இரட்சிப்பு என்பது மனுக்குலத்தால் ஈட்ட முடியாதது ஆனால் இயேசுவின் இரத்தத்தினால் அருளப்படக் கூடியது என்பதை நிரூபிக்க அவர் நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். இயேசுவின் பெயரால் மன்னிப்பானது எருசலேமில் பிரசங்கிக்கப்படத் தொடங்கிய பிறகு உலகின் எஞ்சிய பகுதிக்கும் பிரசங்கிக்கப்பட்டது. இந்தப் பிரசங்கித்தலை ஏற்றுக் கொண்ட யாவரும் ஒரே விதமாகவே பதில்செயல் செய்து இரட்சிக்கப்பட்டார்கள்.]

*எபிரெயர் 1:1-4 வசனப் பகுதி இயேசுவைப் பற்றிப் பின்வருவன வற்றைப் போதிக்கின்றது: (1) இவர் மூலமாகவே தேவன் இக்காலத்தில் நம்மோடு பேசியுள்ளார். (2) இவர் எல்லாவற்றிற்கும் சுதந்தரவாளியாக நியமிக்கப்பட்டுள்ளார். (3) அகிலம் முழுவதும் இவர் மூலமாகவே உண்டாக்கப்பட்டது. (4) இவர் இயல்பு மற்றும் மகிமை ஆகியவற்றில் பிதாவைப் போன்றவராகவே இருக்கின்றார். (5) இவர் தம்முடைய வசனத்தினாலே எல்லாவற்றையும் தாங்குகின்றார். (6) இவர் நமது பாவங்களுக்குச் சுத்திகரிப்பை ஏற்படுத்தியுள்ளார். (7) இவர் தமது பணியை நிறைவேற்றிய பிறகு, பிதாவின் வலது புறத்தில் அமர்ந்தார்.*

*இவர் உலகின் பாவங்களை மன்னிக்கக் கூடியவராய் இருப்பதற்காக, இவர் முழு உலகைக் காட்டிலும் அதிகம் மதிப்புடையவராய் இருக்க வேண்டியிருந்தது. ஒருவர், இன்னொரு நபருக்குரிய ஆயிரம் ஒரு ரூபாய்த் தாள்களை எரித்து விடுவாரென்றால், தாம் செய்த செயலுக்குப் பிராயச்சித்தமாக அவர் ஒரு ரூபாய்த் தாள் ஒன்றைச் செலுத்தித் தீர்க்க முடியாது, ஆனால் அவர் ஆயிரம் ரூபாய்த் தாள் ஒன்றைக் கொடுத்துத் தீர்க்க முடியும். இயேசு மனிதராக மட்டும் இருந்திருந்தால், அவர் முழு உலகின் பாவங்களுக்காக மரித்திருக்க முடியாது (யோவா. 1:1), ஆனால் அவர் தேவனாகவும் இருக்கின்றார், மற்றும் இந்தக் காரணத்தினாலேயே அவர் முழு உலகைக் காட்டிலும் அதிகம் மதிப்புடையவராயிருக்கின்றார், இதனால் அவர் இங்கு வாழ்ந்த, வாழும் மற்றும் வாழப் போகும் ஒவ்வொரு நபரின் பாவங்களுக்கும் கிரயம் செலுத்தக் கூடியவராயிருந்தார் (1 யோவா. 2:2).*

*இந்தக் காரணத்தினால், இயேசு தம் இரத்தத்தினால் நமது பாவத்தை மன்னிக்கக் கூடியவராய் இருக்கின்றாரா இல்லையா என்பதல்ல, ஆனால் அவருடைய இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதே கேள்வியாக உள்ளது.*

## I. *நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கின்றீர்களா?*

*தேவன் நம்மை இரட்சிப்பதற்கு முன்பு அவர் நம்மிடம் கேட்கின்றவை களை நாம் செய்துள்ளோமா இல்லையா என்பது நமது மிக முக்கியமான கேள்வியாக உள்ளது. நீங்கள் இரட்சிக்கப்பட்டுள்ளதாகக் கருதுகின்றீர் களா? அப்படியென்றால், இரட்சிக்கப்பட நீங்கள் என்ன செய்தீர்கள்?*

நீங்கள் செய்தவற்றை நாம் (ஒரு தாளில்) எழுதலாம். இது மட்டும்தானா? நீங்கள் ஞானஸ்நானம் பெற்றீர்களா? எதற்காக நீங்கள் ஞானஸ்நானம் பெற்றீர்கள்? இரட்சிக்கப்பட்டிருத்தல் தொடர்பாக நீங்கள் எப்பொழுது ஞானஸ்நானம் பெற்றீர்கள்? இரட்சிக்கப்படுவதற்கென்றா அல்லது இரட்சிக்கப்பட்டிருந்ததைக் காண்பிப்பதற்கென்றா - எதற்காக நீங்கள் ஞானஸ்நானம் பெற்றீர்கள்? நீங்கள் ஒரு சபையில் சேருவதற்காகவா அல்லது இரட்சிக்கப்படுவதற்காகவா எதற்காக ஞானஸ்நானம் பெற்றீர்கள்? “இரட்சிக்கப்பட்டேன்” என்ற வார்த்தையை நாம் எழுதுவது என்றால், ‘‘ஞானஸ்நானம் பெற்றேன்’’ என்ற வார்த்தையை அதற்கு முன்பாக எழுதுவீர்களா அல்லது அதற்குப் பின்பாக எழுதுவீர்களா?

நீங்கள் இரட்சிக்கப்பட்டுள்ளீர்களா அல்லவா என்பதை வேதாகமம் முடிவு செய்யும்படி வேதாகமத்தை அனுமதிக்க நீங்கள் மனதாயிருக்கின்றீர் களா? வேதாகமத்தின் போதனையின்படி உங்கள் இரட்சிப்பை சோதித்தறிய நீங்கள் மனதாயிருக்கின்றீர்களா?

(1) நாம் குறிப்பிட்ட சிலவற்றைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் போதிக்கின்றது. அவற்றை நீங்கள் செய்திருக்கின்றீர்களா? நாம் செய்ய வேண்டிய செயலாக யோவான் 6:45 வசனம் போதிப்பது என்ன? [யோவா. 6:45ஐ வாசிக்கவும்.] இயேசுவிடம் வர முடிந்தவர்கள் என்ன செய்துள்ளனர்? [கோடிட்ட இடத்தில் “கேட்டு கற்றுக் கொள்ளுதல்” என்று எழுதி நிரப்பவும்.] இயேசுவிடம் வருகின்ற நபர் தேவனாலே போதிக்கப்பட வேண்டும் என்று இவ்வசனப் பகுதி எடுத்துரைக்கின்றது. நாம் வேதாகமத்தை வாசிக்கும் பொழுது நமக்குப் போதிப்பது யார்? நாம் வேதாகமத்தை வாசித்தால், நாம் மனிதராலா அல்லது தேவனாலா, யாரால் போதிக்கப்படுகின்றோம்? மனிதரின் போதனையா அல்லது தேவனின் போதனையா, எது நம்மை இயேசுவிடம் கொண்டு வருகின்றது? தேவனுடைய போதனை மட்டுமே நம்மை இயேசுவிடம் கொண்டு வருவதில்லையா?

(2) நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவனுடைய வசனம் நமக்குப் போதிக்கின்றது? [யோவா. 8:24ஐ வாசிக்கவும்.] நாம் நமது பாவங்களில் மரிப்பதிலிருந்து நம்மைக் காத்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும்? [கோடிட்ட இடத்தில் “இயேசுவில் விசுவாசம் கொள்ளுதல்” என்று எழுதி நிரப்பவும்.] இயேசுவில் விசுவாசம் கொள்ளாதிருந்தால் நமக்கு என்ன நடக்கும் (யோவா. 8:21)?

(3) நாம் வேறு எவற்றைச் செய்ய வேண்டும் என்று வசனம் நமக்குப் போதிக்கின்றது? [அப். 17:30ஐ வாசிக்கவும்.] எல்லா மனிதரும் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் கட்டளையிடுகின்றார்? [கோடிட்ட இடத்தில் “மனந்திரும்பு” என்று எழுதி நிரப்பவும்.] நாம் எவற்றிலிருந்து மனந்திரும்ப வேண்டும்? ‘‘மனந்திரும்புதல்’’ என்றால் என்ன? (ஒருவர் தம் பாவங் களுக்காக மனம் வருந்துதலை ‘‘மனந்திரும்புதல்’’ என்று அர்த்தப் படுவதாகப் பலர் நம்பிக் கொண்டுள்ளனர். 2 கொரி. 7:10ன்படி வருத்தம் என்பது ஒருவர் மனந்திரும்பக் காரணமாக வேண்டும், ஆனால் வருத்தம் மட்டுமே மனந்திரும்புதல் ஆகி விடாது. தேவனைப் பிரியப்படுத்தாத

செயல்களைச் செய்வதிலிருந்து திரும்பி, அவரைப் பிரியப்படுத்தும் செயல்களைச் செய்வது என்று இருதயத்தில் தீர்மானம் செய்தலே மனந்திரும்புதலாக உள்ளது.)

*(4) இயேசுவில் விசுவாசம் கொள்பவர்கள் மனந்திரும்புதல் என்பதை மட்டுமின்றி, வேறு எதைச் செய்ய வேண்டியதாகவும் உள்ளது?* [ரோமர் *10:10*ஐ வாசிக்கவும்.] *ஒருவர் இரட்சிக்கப்படுவதற்குத் தமது வாயினால் அவர் என்ன செய்ய வேண்டும்?* [கோடிட்ட இடத்தில் "அறிக்கையிடுதல்" என்று எழுதி நிரப்பவும்.] *ஒருவர் எதை அறிக்கை செய்கின்றார்? (ரோமர் 10:9). அவர் தம் பாவங்களை அறிக்கை செய்வதில்லை, ஆனால் அவர் இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்கின்றார் (மத். 16:16).*

*(5) இயேசுவில் விசுவாசம் கொண்டுள்ளவர் வேறு எவற்றைச் செய்ய வேண்டும்?* [மத். *28:18, 19;* அப். *8:35-39* ஆகியவற்றை வாசிக்கவும்.] *இயேசுவைப் பற்றிப் போதிக்கப்பட்டு, அவரில் விசுவாசம் கொண்டவர்கள் எதைச் செய்ய வேண்டியிருந்தது?* [கோடிட்ட இடத்தில் "ஞானஸ்நானம் பெறுதல்" என்று எழுதி நிரப்பவும்.]

*ஞானஸ்நானத்தின் பொழுது வாக்களிக்கப்படுவது என்ன? புது வழியை முதன் முதலாய்ப் பிரசங்கித்ததைக் கேள்விப்பட்டவர்கள் எந்தக் காரணத் திற்காக இயேசுவின் பெயரால் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கூறப்பட்டது?* [அப். *2:38*ஐ வாசிக்கவும்.] *அவர்கள் எந்தக் காரணத்திற்காக ஞானஸ்நானம் பெற வேண்டியிருந்தது?* [கோடிட்ட இடத்தில் "பாவமன்னிப்பு" என்று எழுதி நிரப்பவும்.]

*சவுல் இயேசுவில் விசுவாசம் கொள்ளத் தொடங்கியிருந்து தம் பாவங்களிலிருந்து மனந்திரும்பியிருந்தார். அவர் மன்னிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று அவருக்குக் கூறப்பட்டது?* [அப். *22:16*ஐ வாசிக்கவும்.] *அவர் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கூறப்பட்டது ஏன்?* [கோடிட்ட இடத்தில் "பாவத்தைக் கழுவிப் போக்குவதற்கு" என்று எழுதி நிரப்பவும்.]

*விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுதல் பற்றி இயேசு என்ன கூறினார்?* [மாற். *16:15, 16*ஐ வாசிக்கவும்.] *விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுபவர் என்ன செய்யப்படுவார் என்று இயேசு கூறினார்?* [கோடிட்ட இடத்தில் "இரட்சிக்கப்படுவார்" என்று எழுதவும்.] *இயேசு போதித்ததை ஒத்துப் போகும் வகையில் பேதுரு எழுதியது என்ன?* [1 பேது. *3:21*ஐ வாசிக்கவும்.] *இப்பொழுது ஞானஸ்நானம் நமக்கு என்ன செய்கிறது என்று பேதுரு கூறுகின்றார்? இது இயேசு கூறியதுடன் ஒத்துப் போகின்றதா?*

*இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? தேவனுடைய வசனத்தின் போதனை மூலம் இயேசுவில் விசுவாசம் கொண்டுள்ளவர்கள், இயேசுவுக்காக வாழத் தீர்மானித்து, அவரில் உள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, அவர்கள் ஞானஸ்நானம் பெறும் பொழுது தங்கள் பாவங் களிலிருந்து இரட்சிக்கப்படுவார்கள் என்று நாம் கற்றுக் கொண்டுள்ளோம்.* [*"இரட்சிக்கப்படுதல்" என்றால் ஒருவர் தம் பாவங்களில் இருந்து இரட்சிக்கப்படுதல் என்று அர்த்தப்படுகின்றது (மத். 1:21).*]

இரட்சிக்கப்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டவர்களாய் இருப்பதில்லை. அவர்கள் யாருடன் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்? [அப். 2:47ஐ வாசிக்கவும்.] இரட்சிக்கப்பட்டவர்கள் யாருடன் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள்? [கோடிட்ட இடத்தில் "சபையுடன் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள்" என்று எழுதி நிரப்பவும்.] ஒருவர் ஞானஸ்நானம் பெறும் பொழுது அவர் இரட்சிக்கப்படுகின்றார் என்பதையும், பின்பு அவரை தேவன் சபை என்ற விசுவாசிகளின் சமூகத்தில் சேர்த்துக் கொள்கின்றார் என்பதையும் விளக்கவும்.

## II. கிறிஸ்துவுக்குள்

இரட்சிப்பைப் போன்ற முக்கியமான விஷயத்தை யோசனை செய்து பார்ப்பதில், ஒவ்வொருவரும் கேள்விக்கு இடமின்றி தாம் வேதாகமத்தின் போதனையைப் புரிந்து கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒருவருடைய வருமான வரியைக் கணக்கிடுவதில், ஒருவர் வழக்கமாக அந்தக் கணக்கீடுகளை இரண்டு அல்லது மூன்று முறைகள் சரி பார்த்து மற்றும் தாம் தவறு எதுவும் செய்யவில்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு இரண்டு அல்லது மூன்று வித்தியாசப்பட்ட வழிமுறைகளில் அக்கணக்கீட்டைச் சரிபார்ப்பார். இரட்சிப்பைப் பற்றி வேதாகமம் போதிக்கின்றது என்ன என்பதைப் பற்றித் தீர்மானிக்க முயற்சி செய்யும் பொழுது இதை விட பெரிய கவனத்தை நாம் மேற்கொள்ள வேண்டும்.

இந்தப் (பாடப்) பகுதியில் நாம், இயேசுவின் இரத்தத்தின் பயன்களைப் பெறுவது எப்பொழுது என்பது பற்றித் தவறு எதுவும் செய்து விடாதிருக் கின்றோம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளச் சோதித்துப் பார்க்கப் போகின்றோம். **கிறிஸ்துவுக்குள்** இருக்கும் ஆசீர்வாதங்களை யோசித்துப் பார்ப்பதினாலும், அந்த ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு ஒருவர் கிறிஸ்துவுக்குள் எவ்விதம் பிரவேசிக்கிறார் என்று தீர்மானிப்பதாலும் செய்வோம்.

''கிறிஸ்துவுக்குள்'' இருக்கின்ற நபர் பெறுகின்ற ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் யாவை? [2 கொரி. 5:17ஐ வாசிக்கவும்.] கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற நபர் என்னவாக இருக்கின்றார்? [2 கொரி. 5:17க்குப் பிறகு "கிறிஸ்துவுக்குள்" என்ற வார்த்தை அடங்கியுள்ள வரைபடத்தினுள் உள்ள கோடிட்ட இடத்தில் "புதுச் சிருஷ்டி" என்று எழுதி நிரப்பவும்.]

கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற நபர் பெறுகின்ற ஆவிக்குரிய மற்ற ஆசீர் வாதங்கள் யாவை? [கொலோ. 1:14 (அல்லது) எபே. 1:7ஐ வாசிக்கவும்.] கிறிஸ்துவுக்குள் உள்ள ஆசீர்வாதம் என்ன? [கோடிட்ட இடத்தில் "பாவமன்னிப்பு" என்று எழுதவும்.] கிறிஸ்துவுக்குள் உள்ள எது இப்பாவ மன்னிப்பைச் சாத்தியமாக்குகின்றது? கிறிஸ்துவுக்குள் இருக்கும் இரத்தம் பாவங்களை மன்னிக்கின்றதா? கிறிஸ்துவுக்குள் இருக்கின்றவர்கள் இயேசுவின் இரத்தத்தின் மூலமாக மன்னிப்பைப் பெறுகின்றனர்.

கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற ஆவிக்குரிய இன்னொரு ஆசீர்வாதம் என்ன? [2 தீமோ. 2:10ஐ வாசிக்கவும்.] கிறிஸ்துவுக்குள் என்ன ஆசீர்வாதம் உள்ளது? [கோடிட்ட இடத்தில் "இரட்சிப்பு" என்று எழுதி நிரப்பவும்.]

கிறிஸ்துவுக்குள் இரட்சிப்பு உள்ளது ஏனென்றால் இன்னொரு ஆசீர்வாதமும் கிறிஸ்துவுக்குள் உள்ளது (2 தீமோ. 2:1). அது என்ன? தேவனுடைய கிருபையினால் மனித குலத்தின் இரட்சிப்புக்காக இயேசுவின் இரத்தம் சிந்தப்பட்டது. இந்தக் கிருபை கிறிஸ்துவுக்குள் இருக்கின்றது மற்றும் இது கிறிஸ்துவுக்குள் உள்ள இரட்சிப்பை அருளுகின்றது.

கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற ஆவிக்குரிய மற்ற ஆசீர்வாதம் என்ன? [1 யோவா. 5:11ஐ வாசிக்கவும்.] கிறிஸ்துவுக்குள் உள்ள ஆசீர்வாதம் என்ன? [கோடிட்ட இடத்தில் "நித்திய ஜீவன்" என்ற எழுதி நிரப்பவும்.] நித்திய ஜீவனைப் பெறுவதற்காக (யோவா. 3:16) இயேசுவில் கொள்ளும் விசுவாசம் கிறிஸ்துவுக்குள் பிரவேசிப்பதற்காக இயேசு கேட்கின்றதைச் செய்வதை உள்ளடக்க வேண்டும்.

கிறிஸ்துவுக்குள் வேறு என்ன உள்ளது? [எபே. 1:3ஐ வாசிக்கவும்.] கிறிஸ்துவுக்குள் எத்தனை ஆசீர்வாதங்கள் உள்ளன? [கோடிட்ட இடத்தில் "ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்கள்" என்று எழுதி நிரப்பவும்.] பல மக்கள் தாங்கள் கிறிஸ்துவுக்குள் இருப்பதைக் குறிப்பதாக பணம், கார்கள், சொத்து, உடமைகள், பழைய ஏற்பாட்டின் ஆசீர்வாதங்கள் போன்ற உலகப்படியான ஆசீர்வாதங்களைக் கருதுகின்றனர்; இருப்பினும் இவைகள் கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்கள் அல்ல. கிறிஸ்தவர் அல்லாதவர்களும் இந்த ஆசீர்வாதங்களைப் பெற முடியும், ஆனால் கிறிஸ்துவுக்குள் உள்ளவர்களுக்கு மட்டுமே அதாவது கிறிஸ்தவர்களுக்கே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் கிடைக்கின்றன.

**கிறிஸ்துவுக்குப் புறம்பே** இருப்பவர்களின் நிலை என்ன? அவர்கள் கிறிஸ்துவுக்குள் உள்ள ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கின்றார்களா? [எபே. 2:12, 13ஐ வாசிக்கவும்.] கிறிஸ்துவுக்குப் புறம்பே இருக்கின்றவர்கள் கொண்டிராதவை என்ன? ["கிறிஸ்துவுக்கு புறம்பே" என்பதன் கீழ் உள்ள கோடிட்ட இடங்களில் ''கிறிஸ்து இல்லாதவர்கள்,'' ''நம்பிக்கை யில்லாதவர்கள்" மற்றும் "தேவனற்றவர்கள்" என்று எழுதி நிரப்பவும்.]

அவர்கள் கிறிஸ்துவுக்குள் பிரவேசிப்பதற்கு முன், தூரமாயிருந்தனர் ஆனால் இப்பொழுது அவர்கள் கிறிஸ்துவுக்குள் உள்ளனர், இயேசுவின் இரத்தத்தால் அவர்கள் சமீபமானார்கள் என்பதைக் கவனிக்கவும். தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டிருந்தவர்களை இயேசுவின் இரத்தம் தேவனுக்கு அருகில் கொண்டு வருகின்றது. இயேசுவின் இரத்தத்தினால் சமீபத்திற்குக் கொண்டு வரப்பட்டவர்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றனர், இயேசுவின் இரத்தத்தினுடைய பயனைப் பெறுவதற்கு ஒருவர் எங்கிருக்க வேண்டும்? அவர் கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டும்.

இயேசுவுக்கு வெளியே ஒருவர் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற முடியுமா? ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டும் என்றே தேவன் திட்டமிட்டு வாக்களித்தார் (ஆதி. 22:18; கலா. 3:14-16).

வேதவாக்கியங்களின் இரு வசனப் பகுதிகள் மட்டுமே ஒருவர் எப்பொழுது கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கின்றார் என்பதை எடுத்துரைக் கின்றன. ஒருவர் எவ்விதம் இயேசுவுக்குள் பிரவேசிக்கின்றார்? [கலா. 3:27

மற்றும் ரோமர் 6:3, 4 ஆகியவற்றை வாசிக்கவும்.] ஒருவர் இயேசுவுக்குள் எப்பொழுது பிரவேசிக்கின்றார்? [காலியாக உள்ள கட்டத்தில் (அம்புக் குறியிட்டது) "ஞானஸ்நானத்திற்குள்" என்றெழுதி நிரப்பவும்.]

கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு ஒரு நபர் என்ன செய்ய வேண்டும்? ஒரு நபர் இந்த ஆசீர்வாதங்களைக் கிறிஸ்துவுக்கு வெளியே பெற முடியுமென்றால், அவர் இயேசுவின் இரத்தம் இன்றியே இவற்றைப் பெற முடியும், ஏனெனில் இயேசுவின் இரத்தம் அவருக்குள் இருப்பவர்களுக்கேயானதாகும்.

பகுதிகள் I மற்றும் II ஆகியவை ஒரே வகையான சத்தியத்தைப் போதிப்பதைக் கவனியுங்கள். ஞானஸ்நானம் பெறும் பொழுது ஒருவர் "பாவமன்னிப்பு," "பாவங்கள் கழுவப்படுதல்" மற்றும் "இரட்சிப்படைதல்" ஆகியவற்றைப் பெறுகின்றார். ஒருவர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும் பொழுது, பழையவைகள் (பாவங்கள் என்பது தெளிவு) ஒழிந்து போவதால் இயேசுவின் இரத்தத்தினால் அவர் "புதுசிருஷ்டி" ஆகின்றார், இது "பாவங்கள் கழுவப்படுதலுக்கு" இணையானது மற்றும் இயேசுவின் இரத்தத்தினால் அவர் "பாவமன்னிப்பும்" "இரட்சிப்பும்" அடைகின்றார் அல்லது வேறு வார்த்தையில் சொல்வதென்றால், "இரட்சிக்கப்படுகின்றார்."

மன்னிப்பு என்றால் *என்ன*? மற்றும் அது *எப்பொழுது* கிடைக்கின்றது? என்பதையும் கவனியுங்கள். *எது* பாவத்தை மன்னிக்கிறது என்பதற்கு இயேசுவின் இரத்தம் என்பது பதிலாயிருக்கையில், *எப்பொழுது* என்பதற்கு ஞானஸ்நானத்தில் இயேசுவின் இரத்தம் நம் பாவங்களை மன்னிக்கிறது. *என்ன/எது* என்பது ஞானஸ்நானம் அல்ல ஏனெனில் தண்ணீரானது பாவங்களை மன்னிக்கும் வல்லமை கொண்டிருப்பது இல்லை. மாறாக, ஞானஸ்நானத்தின் *பொழுது* பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. பார்வையற்ற மனிதன் குணமடைந்த நிகழ்ச்சியானது என்ன மற்றும் *எப்பொழுது* என்பதற்கு வேதாகமத்தின் நல்லதொரு எடுத்துக்காட்டாக உள்ளது (யோவா. 9:1-7). இயேசுவின் வல்லமை தான் அம்மனிதரைப் பார்வை பெறச் செய்தது, ஆனால் அம்மனிதர் சீலோவாம் குளத்தில் கழுவிய *பொழுதுதான்* காணத் தொடங்கினார். தண்ணீரல்ல, இயேசுவின் வல்லமையே அவரைக் காணும்படி செய்தது. அது போலவே, ஞானஸ்நானம் நமது பாவங்களை மன்னிப்பதில்லை (இயேசுவின் இரத்தம் அதைச் செய்கின்றது) ஆனால் ஞானஸ்நானத்தின் *பொழுது* இயேசுவின் இரத்தம் மன்னிக்கின்றது.

### ஒரே ஞானஸ்நானம்

[ஞானஸ்நானத்தைக் குறித்த வேதாகமப் போதனையை மாணவர் புரிந்து கொண்டிருக்கிறார் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு பாடத் தாளின் பின்புறத்தில் "ஒரே ஞானஸ்நானம் (எபே. 4:5)" என்று எழுதவும், பிறகு பின்வரும் வார்த்தைகளை எழுதவும்: "1. யார்?"; "2. ஏன்?"; "3. என்ன?"; "4. எப்படி?"]

எந்த ஞானஸ்நானமும் சரியானதே என்று வேதாகமம் போதிப்ப தில்லை. ஒரே ஞானஸ்நானம் உண்டு என்றுதான் வேதாகமம் போதிக்

கின்றது. ஒரு நபர் தனது சட்டைப் பையில் பல சாவிகளை வைத்திருக் கலாம், ஆனால் அவரிடத்தில் சரியான சாவி இல்லையென்றால் அவரால் கதவைத் திறக்க முடியாது. அது போலவோ, ஒருவர் பல முறை ஞானஸ்நானம் பெற முடியும், ஆனாலும் கூட அவர் நாம் பெறும்படி இயேசு விரும்பும் ஒரே ஞானஸ்நானத்தைப் பெறாதவராயிருக்கவும் கூடும்.

பாடத் தாளின் முன்புறத்தில் நாம் *யார்* ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று கற்றோம். *யார்* ஞானஸ்நானம் பெற வேண்டும்? (சுவிசேஷத்தைக்) கேள்விப்பட்டு அறிந்து கொண்டு, இயேசுவை விசுவாசித்து, மனந்திரும்பி, மற்றும் இயேசுவை அறிக்கையிட்டவர்களே ஞானஸ்நானம் பெற முடியும். [பாடத் தாளின் பின்புறத்தில் ''யார்?'' என்ற கேள்விக்கு அருகில் "கேள்விப்பட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டவர்கள்" என்று எழுதவும், மற்றும் இது மறுபுறத்தில் கற்றுத் தரப்பட்டது என்பதை விளக்கவும். (பக்கம் 184ஐப் பார்க்கவும்)]

ஒருவர் *ஏன்* ஞானஸ்நானம் பெற வேண்டும்? பெந்தெகொஸ்தே நாளன்று இயேசுவின் நாமத்தினாலே பாவமன்னிப்பு என்பது முதன் முதலாகப் பிரசங்கிக்கப்பட்ட பொழுது, பேதுரு "பாவமன்னிப்புக்கென்று" இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தைப் பிரசங்கித்தார். [பாடத் தாளின் பின்புறத்தில் "ஏன்" என்ற கேள்விக்கு அருகில் "பாவமன்னிப்புக்கு (அப். 2:38)'' என்று எழுதவும். (பக்கம் 184ஐப் பார்க்கவும்)] தவறான காரணத்திற்காக ஞானஸ்நானம் என்பது இயேசுவுக்குக் கீழ்ப்படிதலாய் இருப்பதில்லை (எபி. 5:9). பெற்றோர் ஒருவர் தனது பிள்ளையிடம் நகருக்குச் சென்று மளிகைச் சாமான்கள் சிலவற்றை வாங்கி வரும்படி கூறலாம். அந்தப் பிள்ளை நகருக்குச் செல்லுகிறான், ஆனால் மளிகைச் சாமான்களை வாங்கச் செல்லவில்லை என்றால், அவன் நகருக்குச் சென்றிருப்பினும் அவன் தனது பெற்றோருக்குக் கீழ்ப்படியவில்லை. ஒருவர் சரியான காரணத்திற்காக ஞானஸ்நானம் பெறாதிருந்தால், அவர் இயேசுவுக்குக் கீழ்ப்படியாதவராகவே இருக்கின்றார்.

ஞானஸ்நானத்தில் பயன்படுத்தப்படுவது *என்ன*? இயேசு தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றார் (மத். 3:16). எத்தியோப்பிய மந்திரி தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றார் (அப். 8:36-39). மக்கள் தண்ணீரில் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று பேதுரு அறிவுறுத்தினார் (அப். 10:47). [பாடத்தாளின் பின்புறத்தில் "என்ன?" என்ற கேள்விக்கருகில் "தண்ணீர் (மத். 3:16; அப். 8:38, 39)'' என்று எழுதி நிரப்பவும். (பக்கம் 184ஐப் பார்க்கவும்)]

ஞானஸ்நானம் *எவ்வாறு* நிகழ்த்தப்பட்டது? "ஞானஸ்நானத்தில் நாம் 'அடக்கம் பண்ணப்பட்டு' மற்றும் 'உயிர்ப்பிக்கப்படுகிறோம்' " என்று வேதாகமம் போதிக்கின்றது [பாடத் தாளின் பின்புறத்தில் "எப்படி?" என்ற கேள்விக்கருகில் ''அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுப்பப்படுதல் (ரோமர் 6:4; கொலோ. 2:12)" என்று எழுதிக் கொள்ளவும். இயேசுவின் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலை நமது ஞானஸ்நானத்துடன் ஒப்பிடு வதற்கு ஒரு படம் வரையவும். (பக்கம் 184ஐப் பார்க்கவும்)]

ஞானஸ்நானம் என்பது ஒரு சடங்காச்சாரத்திற்கும் மேற்பட்டதாக

உள்ளது. ஞானஸ்நானத்தில் ''பழைய வாழ்வுக்கு'' மரித்தலும் அதைத் தொடர்ந்து ஒரு "புதிய வாழ்வுக்கு" உயிர்த்தெழுதலும் இருக்க வேண்டிய தாக உள்ளது (ரோமர் 6:4). ஞானஸ்நானத்தில் இப்படிப்பட்டதொரு மரணம் ஏற்படும் பொழுது, ஒருவரின் "பாவங்கள் கழுவப்படுகின்றன" மற்றும் அவர் "மன்னிக்கப்படுகின்றார்." இனியும் அவர் பழைய வாழ்வை யல்ல ஆனால் புதிய வாழ்வை வாழ வேண்டியவராய் உள்ளார், மற்றும் இனியும் அவர் ''இழந்து போகப்பட்டவராய்'' அல்ல ஆனால் "இரட்சிக்கப்பட்டவராய்" இருக்கின்றார். [பாடத் தாளின் பின்புறத்தில் இவற்றை எழுதவும். (பக்கம் 184ஐப் பார்க்கவும்)]

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? ஞானஸ் நானத்தில் இயேசுவுடன் அடக்கம் பண்ணப்பட்டு உயிர்ப்பிக்கப் பட்டவர்கள், இயேசுவுக்குள் பிரவேசித்து இயேசுவின் இரத்தத்தினால் அருளப்படுகின்ற ஆசீர்வாதங்களைப் பெறுகின்றனர் என்று நாம் கற்றுள்ளோம். இயேசுவுக்கு வெளியே இருப்பவர்கள் இயேசுவின்றி இருக்கின்றனர், இந்தக் காரணத்தினால் இந்த ஆசீர்வாதங்கள் இன்றி இருக்கின்றனர்.

## III. ஒரே சரீரத்திற்குள்

பகுதி Iல் நாம், ஞானஸ்நானம் பெற்றவர்கள் சபை என்ற விசுவாசிகளின் சமுகத்துடன் சேர்க்கப்படுகின்றனர் என்று கற்றோம். இந்தப் பகுதியில் நாம் இதே கருத்தை இன்னொரு நோக்கில் இருந்து அணுகுவோம்.

1. கிறிஸ்துவுக்குள் உள்ள சரீரங்களின் எண்ணிக்கை பற்றி வேதாகமம் போதிக்கின்றது. கிறிஸ்துவுக்குள் எத்தனை சரீரங்கள் உள்ளன? [ரோமர் 12:5ஐ வாசிக்கவும்.] கிறிஸ்துவுக்குள் உள்ள சரீரங்கள் எத்தனை? [கோடிட்ட இடத்தில் "ஒன்று" என்று எழுதி நிரப்பவும்.]

2. "சரீரம்" என்பது "மாணவர் அமைப்பு" அல்லது "மக்களின் அமைப்பு" என்பது போன்று, மக்களின் குழுவைக் குறிக்கப் பயன்படும் சொற்றொட ராகும். கிறிஸ்துவுக்குள் உள்ள ஒரு சரீரம், (அல்லது) மக்கள் குழு என்பது எது? [கொலோ. 1:18, 24ஐ வாசிக்கவும்.] ஒரே சரீரம் என்பது என்ன? [கோடிட்ட இடத்தில் "சபை" என்று எழுதி நிரப்பவும்.]

3. கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கின்ற ஒருவர் எவ்விதத்தில் கிறிஸ்துவின் ஒரே சரீரத்தில் உறுப்பாக வேண்டியவராயுள்ளார்? பகுதி IIல் நாம், கிறிஸ்துவுக்குள் பிரவேசிப்பது எவ்விதம் என்று கற்றோம். 1 கொரி. 12:13 என்ற இந்த வசனம் அதே சத்தியத்தையே போதிக்கின்றது. [1 கொரி. 12:13ஐ வாசிக்கவும்.] அந்த ஒரே சரீரத்தில் நாம் எவ்வாறு பிரவேசிக்கின்றோம்? [கோடிட்ட இடத்தில் ''ஞானஸ்நானம் பண்ணப்பட்டு'' என்று எழுதி நிரப்பவும்.]

4. கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் எதன் உறுப்பினராய் இருக்கின்றனர்? [1 கொரி. 12:27ஐ வாசிக்கவும்.] இதன் பிறகு நாம் என்னவாக இருக்கின்றோம்? [கோடிட்ட இடத்தில் "கிறிஸ்துவின் சரீரம்" என்று எழுதி நிரப்பவும்.] சரீரமும் சபையும் ஒன்றே. எனவே ஒருவர் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு உறுப்பாய் இருக்கிறார் என்றால், அதனால் அவர்

யாருடைய சபையில் உறுப்பினராய் இருக்க வேண்டும்? [கோடிட்ட இடத்தில் கிறிஸ்துவின் "சபையில்" என்று எழுதி நிரப்பவும்.]

இந்தப் பகுதியில் நாம் கற்றுக் கொண்டுள்ளது என்ன? ஒருவர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும் பொழுது அவர் கிறிஸ்துவின் சரீரத்தின் அதாவது கிறிஸ்துவின் சபையின் உறுப்பினராகின்றார் என்று நாம் கற்றுள்ளோம்.

## தொகுப்புரை

இந்தப் படிப்பில் நாம், ஒருவர் தம் பாவங்களில் இருந்து எவ்விதம் இரட்சிக்கப்படுகின்றார் என்பதைக் கற்றுள்ளோம்.

I. *நீங்கள் இவற்றைச் செய்திருக்கின்றீர்களா?* நீங்கள் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டு, கற்றறிந்து, அவரை விசுவாசித்து, மனந்திரும்பி, இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றிருக்கின்றீர்களா? நீங்கள் இவ்வாறு ஞானஸ்நானம் பெற்றிருந்தால், நீங்கள் உங்கள் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுள்ளீர்கள், உங்கள் பாவங்கள் கழுவப்பட்டுள்ளன, நீங்கள் இரட்சிக்கப்பட்டுள்ளீர்கள், மற்றும் விசுவாசிகளான இயேசுவின் சமூகத்தில் ஒரு உறுப்பினராய் இருக்கின்றீர்கள்.

II. *நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கின்றீர்களா?* அப்படியிருந்தால், நீங்கள் ஒரு புதுசிருஷ்டியாக, பாவங்கள் மன்னிக்கப்பட்டவராக, இரட்சிப்பைப் பெற்றவராக, நித்திய ஜீவனையும் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் பெறுபவராக இருக்கின்றீர்கள். நீங்கள் கிறிஸ்துவுக்குள் இல்லையென்றால், நீங்கள் கிறிஸ்துவை உடையவராயிராமல், நம்பிக்கையற்றவராக மற்றும் தேவனற்றவராக இருக்கின்றீர்கள்.

ஒருவர் கிறிஸ்துவுக்குள் எவ்விதம் பிரவேசிக்கின்றார்? ஒருவரைக் கிறிஸ்துவுக்குள் வைக்கும் ஞானஸ்நானங்கள் எத்தனை? நீங்கள் ஒரே ஞானஸ்நானத்தை (வேதாகமத்தில் கூறப்படுகின்றபடியான ஒரே ஞானஸ்நானத்தை) பெற்றிருக்கின்றீர்களா? நீங்கள் தேவனிடத்திலிருந்து போதிக்கப்பட்டு, இயேசுவில் விசுவாசம் கொண்டு, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, இயேசுவில் உள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு, (தண்ணீரில் அடக்கம் செய்யப்பட்டு தண்ணீரில் இருந்து உயிர்ப்பிக்கப்படுதல் என்ற) ஞானஸ்நானம் பெற்றிருக்கின்றீர்களா? நீங்கள் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றீர்களா?

இரட்சிக்கப்படுவதற்கு நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கூற முடியுமா? நீங்கள் ஒரு ஆவிக்குரிய பொதுக் கூட்டத்தில் முன்னால் வந்தீர்களா? அவர்கள் உங்களை அதே வேளையில் ஞானஸ்நானப் படுத்தினார்களா? அல்லது இன்னொரு வேளைக்காகக் காத்திருந்தார்களா? அவர்கள் அப்படிக் காத்திருந்தால், அவர்கள் ஞானஸ்நானம் முக்கியமானதல்ல என்று நினைத்திருக்க வேண்டும். வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளவர்கள் சத்தியத்தை ஏற்றுக் கொண்ட உடனே ஞானஸ்நானம் பெற்றதாகக் கூறப்படுகின்றது; அதே நாளில் (அப். 2:41), அதே வேளையில் (அப். 16:33), உடனடியாக (அப். 9:18) அவர்கள் ஞானஸ்நானம் பெற்றனர்.

*இரட்சிப்பு என்பது நம்பர் (எண்) பூட்டைப் போன்றது. ஒரு எண்ணை (நம்பரை) நகர்த்துவது என்பது பூட்டைத் திறக்காது. ஒவ்வொரு நகர்த்துதலும் இன்றியமையாததாக உள்ளது. இருப்பினும், அவசியமான எல்லாவற்றையும் செய்த பிறகு பூட்டுத் திறக்கும் வேளை ஒன்றுள்ளது. இதுவே இரட்சிப்பைப் பொறுத்தமட்டிலும் உண்மையானதாக உள்ளது. இரட்சிப்புக்கு இன்றியமையாத யாவற்றையும் விசுவாசத்தின் காரணத்தினால் நாம் நிறைவு செய்யும் போது மற்றும் ஞானஸ்நானத்தில் அவ்வளர்ச்சியின் உச்சத்தை அடையும் பொழுது மட்டும் நாம் இரட்சிக்கப்படுகின்றோம்.*

*நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்க விரும்புகின்றீர்களா? நீங்கள் விரும்புகின்றீர்கள் அல்லவா? இயேசுவுக்காக ஒரு புதிய வாழ்வு வாழ நீங்கள் தயாராய் இருக்கின்றீர்களா? நீங்கள் தயாராயிருந்தால், ஞானஸ்நானத்தில் அவருடன் அடக்கம் பண்ணப்படுவதால் நீங்கள் ஏன் உங்கள் கடந்த கால வாழ்வுக்கு இறந்து, ஒரு புது வாழ்வுக்காக அவருடன் உயிர்த்தெழக்கூடாது?*

III. *நீங்கள் (சபை என்ற) சரீரத்தில் இருக்கின்றீர்களா? எத்தனை சரீரங்களில் (சபைகளில்) நாம் உறுப்பினராய் இருக்க வேண்டும் என்று இயேசு விரும்புகின்றார்?*

*நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் (அதாவது கிறிஸ்துவின் சபையில்) அவயவமாய் இருக்க விரும்புகின்றீர்களா? நீங்கள் ஏன் இயேசுவைப் பின்பற்றுபவராகி அவரது சபையில் பிரவேசிக்கக் கூடாது? நீங்கள் ஏன் இப்பொழுதே ஞானஸ்நானம் பெறக் கூடாது?*